**IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM**

**O.S.NO.27/2015 E.P.NO. R.C.O.P.**

**Deposition of Witness: PW -3**

| | |
|---|---|
| **Name** | : சிவராமன் |
| **Father's Name /W/o** | : எம்.கே.சுந்தரம் |
| **Religion** | : இந்து |
| **Caste** | : முதலியார் |
| **Calling** | : விவசாயி |
| **Address** | : தக்கோலம். |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.10.2019**

***குறுக்கு விசாரணை***

*நான் விவசாயம் செய்து வருகின்றேன். நான் தக்கோலத்தில் உள்ள கல்யாண மண்டபத் தெருவில் நிரந்தரமாக வசித்து வருகின்றேன். பால சுந்தரம் எனக்கு உறவினர் கிடையாது. அவர் எனக்கு நண்பரும் கிடையாது. பால சுந்தரம் என்னுடைய நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர் என்ற முறையில் எனக்கு தெரியும். நிலத்திற்கு போய் வரும்போது அவரைப் பார்ப்பது வழக்கம். தயானந்த முதலியாரை எனக்கு தெரியும். தயானந்த முதலியார் முதலில் மாங்காட்டுச்சேரியில் வசித்து வந்தார் அதன்பிறகு அவர் கர்நாடக மாநிலத்தில் குடியேறிவிட்டார். எந்த வருடம் அவர் கர்நாடகத்திற்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. சத்தியக்கலிம் என்ற இடத்தில் அவர் வசித்து வருவதாக நான் கேள்விப்பட்டேன். தற்சமயம் தயானந்த முதலியார் உயிருடன் இல்லை. எந்த வருடம் எந்த மாதம்*

*அவர் இறந்தார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. வாதி பாலசுந்தரம் அழைத்து தான் நீதி மன்றத்திற்கு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி பாலசுந்தரம் தயானந்த முதலியார் வாரிசுகள் மீது வழக்குப் போட்டுள்ளார். வாரிசுகளின் பெயர் எனக்கு தெரியாது. அவர்களை தவிர வேறு யார் மீதும் வழக்குப் போடப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதிக்கும் தயானந்த முதலியாருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். அவர்களுக்கிடையே நில விக்கிரைய ஒப்பந்தம் தான் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் ஏற்படும் போது நான் அங்குதான் இருந்தேன். அந்த ஒப்பந்தத்தில் தயானந்த முதலியார் தான் கையொப்பம் இட்டார். வாதி கையொப்பம் இடவில்லை. 01.06.1978 -ல் தான் ஒப்பந்தம் எழுதப்பட்டது. மாங்காட்டுச்சேரியை சேர்ந்த ஒரு கணக்குப்பிள்ளை தான் ஒப்பந்தத்தை எழுதினார் அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் உரிமம் பெற்ற ஆவண எழுத்தரா என்று எனக்கு தெரியாது. அவர் கிராம கர்ணம் ஆவார். வா.சா.ஆ 1 ஒப்பந்தத்தை நான் முழுவதும் வாங்கிப் படித்துள்ளேன். சர்வே எண்கள் 103, 104, 106, 107 மற்றும் 127 உள்ள மொத்தம் 2 ஏக்கர் 99 செண்ட் சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. கிரையத் தொகை 10,500 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அன்றைய தினமே தயானந்த முதலியாரிடம் ரூபாய் 2000-ஐ வாதி கொடுத்தார். மேற்படி ஒப்பந்தத்தில் அக்டோபர் மாதம் 15 தேதி 1978 வருடத்திற்குள் மீதி பணத்தை கொடுக்கவேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது. மேற்படி மீதித்தொகை 15.10.1978 க்குள் கொடுக்கப்படவேண்டும் என்று முக்கியமான சரத்தாக ஒப்பந்தத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 15.10.1978 க்குள் வாதி*

பாக்கிப் பணத்தை தயானந்த முதலியாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தப் பத்திரத்தில் மீதி கிரையத்தொகையை வாதி கொடுக்கும் பட்சத்தில் கிரையப் பத்திரத்தை வாதி செலவில் எழுதிக் கொடுக்கவேண்டும் என்றும் அவ்வாறு இல்லை என்றால் தயானந்த முதலியார் 2 மடங்கு அட்வான்ஸ் தொகையை திரும்பத் தர வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது உண்மைதான். மேலும் கிரையப் பத்திரத்தில் மீதித் தொகையை காலக் கெடுவிற்குள் வாதி செலுத்தி பத்திரப்பதிவு செய்து கொள்ளாவிட்டால் அவருடைய அட்வான்ஸ் தொகையை இழந்துவிட வேண்டியது என்று சொல்லப்பட்டுள்ள விவரம் உண்மைதான். நிபந்தனையை மீறி நடந்தால் சிவில் கிரிமினல் தண்டனைக்கு உள்ளாகிறேன் என்று தயானந்த முதலியார் மேற்படி ஒப்பந்தத்தில் சொல்லியுள்ளார் என்றும் அதற்கு வாதி ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு வாதி தயானந்த முதலியாரை பார்த்தாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகும் நான் வாதி மற்றும் தயானந்த முதலியாரை பார்த்துள்ளேன். ஆனால் தயானந்த முதலியார் எதுவும் சொல்லவில்லை. நான் அவரை மாங்காட்டுச்சேரியில் தான் பார்த்தேன். நான் தனியாகத் தான் சென்று அவரைப் பார்த்தேன். ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதியில் இருந்து அதே வருடத்தில் சுமார் 4, 5 முறை தயானந்த முதலியாரை நான் பார்த்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள மீதி பணம் வாதியால் கொடுக்கப்பட்டுள்ளதா என்று நான் சாதாரண முறையில் தயானந்த முதலியாரிடம் அதே வருடம் கேட்டுள்ளேன். குறிப்பிட்டு தேதி மாதம் தெரியாது. தயானந்த முதலியார் நான் கேட்ட போது வாதி

பயிர் சாகுபடி பணம் வந்த பிறகு நிலுவைத்தொகையை செலுத்துவதாக சொல்லியுள்ளதாக என்னிடம் தெரிவித்தார். வாதியை நான் பார்க்கவில்லை. தயானந்த முதலியார் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் வாதி ரூபாய் 5000-ஐ தன்னிடம் கொடுத்ததாக அவர் என்னிடம் தெரிவித்தார். மேற்படி 5000 ரூபாய் வாதி கொடுத்ததையும் தயானந்த முதலியார் பெற்றதையும் நான் நேரில் பார்க்கவில்லை. மேற்படி 5000 ரூபாய் பணம் கொடுக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. 1979 ம் வருடம் ஜனவரி மாதம் பொங்கலுக்கு முன்பு தயானந்த முதலியாரை மாங்காட்டுச்சேரியில் பார்த்தபோது அவர் என்னிடம் 5000 ருபாய் வாதி கொடுத்துவிட்டதாகவும் அதற்கு செல் எழுதப்பட்டதாகவும் மீதமுள்ள 3500 ரூபாய் பணத்தை கொடுத்தால் கிரையப்பத்திரம் எழுதிக் கொடுக்கமுடியும் என்றும் வாதியிடம் பணத்தை கொடுக்குமாறு சொல்லச்சொல்லி சொன்னார் நானும் இதை வாதியிடம் தெரிவித்தேன். அப்போது எங்களுடன் வேறுயாரும் இல்லை. நான் தயானந்த முதலியாரை என்னுடைய நிலத்தை பயிர் செய்ய செல்லும் போது அந்த வழியில் அவரைப் பார்த்தேன். மேற்படி சமயத்தில் மாங்காட்டுச்சேரியில் தயானந்த முதலியார் நிரந்தரமாக குடியிருந்தாரா என்று தெரியாது. பார்க்கும்போது பணம் குறித்து தான் அவரிடம் நான் பேசினேன். அவர் எங்கு வசிக்கிறார் என்று நான் கேட்டதில்லை. தயானந்த முதலியார் என்னிடம் பேசியதில் 'இருந்து சுமார் ஒரு வாரக் காலத்திற்குள் அந்த விவரத்தை வாதியிடம் நான் தெரிவித்தேன். வாதியையும் நான் என்னுடைய நிலத்திற்கு போகும் வழியில் பார்க்கும்போது தான் இந்த விவரத்தை தெரிவித்தேன். வாதி மகசூல் வந்தப் பின்பு மீதிக் கிரையத் தொகையாகிய 3500-ஐ செலுத்திவிட்டு

பத்திரப்பதிவு தயானந்த முதலியாரிடம் செய்து கொள்வதாக என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகும் வாதியையும் தயானந்த முதலியாரையும் நான் பார்த்துள்ளேன். இருவரையுமே என்னுடைய நிலத்திற்கு போகும் வழியில் தான் நான் பார்த்துள்ளேன். இருவரையும் தனித்தனியாகத்தான் பார்த்துள்ளேன். இருவரையும் ஒன்றாக பார்த்தது கிடையாது. அவர்களை நான் எப்போதும் ஒன்றாக பார்த்தது கிடையாது. ஏற்கனவே நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு 15.07.1979-ல் தயானந்த முதலியாரிடம் ரூபாய் 3000 ஏற்கனவே கொடுக்கப்பட்டு மீதம் உள்ள 500 ரூபாயை வாதி கொடுக்கவேயில்லை என்று முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள மேற்படி விவரம் தவறானது என்றால் சரியல்ல. 15.07.1979 ல் மேற்படி மாங்காட்டுச்சேரியில் வாதி வீட்டில் வைத்து தான் எழுதப்பட்டது. பத்திரம் வாங்கிக்கொடுத்தால் அன்றைய தினமே பதிவு செய்து கொடுப்பதாக தயானந்த முதலியார் வாதியிடம் தெரிவித்தார். தயானந்த முதலியார் அவருடைய நண்பர் சோமசுந்தர முதலியார் மூலமாகத்தான் ஏற்கனவே எனக்கு தகவல் தெரிவித்து இருந்தார் அதன் அடிப்படையில் தான் நான் வாதி வீட்டிற்கு சென்றிருந்தேன். வாதியோ தயானந்த முதலியாரோ நேரடியாக இந்தத் தகவலை என்னிடம் தெரிவிக்கவில்லை. கடைசியாக எழுதியது சோமசுந்தர முதலியார் தான். அவர் தக்கோலத்தை சேர்ந்தவர் தான் அவர் தற்சமயம் உயிருடன் இல்லை. வாதியின் தம்பி நாராயணசாமியும் அங்கு இருந்தார். சோமசுந்தர முதலியாரும் அங்கு இருந்தார். நான் செல்லும் போது வாதியின் தம்பி அங்கு தான் இருந்தார். மேற்படி தேதியில் தயானந்த முதலியார் மாங்காட்டுச்சேரிக்கு வரவேயில்லை என்றும் எந்தப் பணமும்

வாதியிடம் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் வா.சா.ஆ 2 மற்றும் 3 ஆவணங்கள் வாதியால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் மேற்படி ஆவணம் குறித்து வாதியின் சார்பாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் நண்பர் என்பதால் அவர் சார்பாக அவர் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 மற்றும் 3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் தயானந்த முதலியாருடையது கிடையாது என்றும் அவர் எந்தப்பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் கொடுக்கப்பட்டிருந்தால் பத்திரப்பதிவு அந்த சமயத்திலேயே ஏற்பட்டிருக்கும் என்றும் அதனால் தான் பொய்யான காரணங்களுடன் தாவா போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.